நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – கீழ்ப்பிரிவு

## Level : Intermediate - Lower

***June 2013***

வினாக்கள் : 50

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களைத் தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**பின்வரும் பாடலை வாசித்து 1–5 வினாக்களுக்கு விடை தருக.**
**Read the poem below and answer the questions 1–5.**

**ஓடி விளையாடு பாப்பா - நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா - ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா.**

**கொத்தி திரியுமந்தக் கோழி - அதைக்**
**கூட்டி விளையாடு பாப்பா.**
**எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு**
**இரக்கப் படவேணும் பாப்பா.**

**பாலைப் பொழிந்துதரும் பாப்பா - அந்தப்**
**பசுமிக நல்லதடி பாப்பா**
**வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது**
**மனிதர்க்குத் தோழனடி பாப்பா.**

**காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு**
**கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு**
**மாலை முழுதும் விளையாட்டு - என்று**
**வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.**

**பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்**
**புறஞ்சொல்ல லாகாது பாப்பா**
**தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு**
**தீங்கு வர மாட்டாது பாப்பா.**

\- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

1. மேற்கூறிய பாடலை எமக்கு இயற்றித் தந்தவர்.

   (a) பாரதிதாசன்
   (b) இளங்கோ அடிகள்
   (c) சுப்பிரமணிய பாரதியார்
   (d) கம்பன்

2. மனிதர்களின் தோழன் என்று கவிஞர் குறிப்பிடுவது.
   (a) பூனை
   (b) நாய்
   (c) கோழி
   (d) காகம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

3. யார் நமக்கு துணையாக இருப்பார் என்று கவிஞர் கூறுகின்றார்.
   (a) அம்மா
   (b) பெற்றோர்
   (c) தெய்வம்
   (d) ஆசிரியர்

4. நாம் பின்பற்ற வேண்டிய குணங்கள்.
   (a) பொய்சொல்லக் கூடாது, புறஞ்சொல்லல் ஆகாது.
   (b) மெய் சொல்லக் கூடாது.
   (c) நேர்மையாக நடக்கக் கூடாது.
   (d) மற்றவர்களை பற்றி கூடாமல் கதைக்க வேண்டும்.

5. பாரதியார் ஒரு
   (a) விஞ்ஞானி
   (b) விமான ஓட்டுனர்
   (c) புலவர்
   (d) ஆசிரியர்

**6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கான ஒத்த கருத்து சொல்லை தெரிவு செய்க.**

**For questions 6 – 10 choose the most appropriate word that is same in meaning to the underlined word.**

6. கமலா தடித்த சட்டை அணிந்தாள்.
   (a) சிறிய
   (b) அரிய
   (c) நீண்ட
   (d) பருமனான

7. அம்மா வீட்டுக்கதவை மூடினார்.
   (a) அப்பா
   (b) தாய்
   (c) பிதா
   (d) குரு

8. கந்தனின் கரம் அழகானது.
   (a) கை
   (b) முகம்
   (c) கண்
   (d) நெற்றி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

9. நான் படத்திற்கு வர்ணம் தீட்டினேன்.
   (a) வரைதல்
   (b) கீறுதல்
   (c) நிறம்
   (d) அடித்தல்

10. இந்துவின் செவி சிறியது.

   (a) காது
   (b) கன்னம்
   (c) மூக்கு
   (d) நெற்றி

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கான எதிர்ச் சொல்லை தெரிவு செய்க.**

**For questions 11 – 15 choose the correct word that is opposite in meaning to the underlined word.**

11. என்னிடம் பெரிய பென்சில் இருக்கிறது.
   (a) சிறிய
   (b) குரிய
   (c) முறிந்த
   (d) ஏரிந்த

12. நான் அலுமாரியின் கதவை மூடினேன்.
   (a) வைத்தேன்
   (b) உடைத்தேன்
   (c) உதைத்தேன்
   (d) திறந்தேன்

13. அப்பா இறந்த செய்தியைக் கேட்ட கமலன் துக்கம் நிறைந்த மனத்துடன் இருந்தான்.
   (a) அழகிய
   (b) சந்தோசம்
   (c) கவலை
   (d) ஆடம்பரம்

14. விளையாட்டு மைதானத்திற்கு அருகே நெட்டையான மரங்கள் நின்றன.
   (a) குட்டையான
   (b) நீளமான
   (c) அழகான
   (d) உயரமான

15. பள்ளிக்கூடம் வீட்டிற்கு <u>பின்னால்</u> இருக்கின்றது.
   (a) அருகில்
   (b) முன்னால்
   (c) எதிரில்
   (d) தொலைவில்

**பின்வரும் பந்தியை வாசித்து 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

**Read the text below and select the most appropriate word for the questions 16 – 20.**

கிருமிகள் பூச்சி புழுக்களைவிட மிக மிகச் சிறியவை. கண்ணுக்குத் தெரியாதவை. இந்தக் கிருமிகளினால் பல நோய்கள் உண்டாகின்றன. இலையான்கள் மலத்தில் அல்லது எச்சிலில் இருக்கும் பொழுது இவற்றின் கால்களில் நோய்க்கிருமிகள் ஒட்டிக் கொள்ளும். பின் இவை நமது உணவில் வந்து இருக்கும்போது அதே உணவை நாம் உண்ணும் பொழுது கிருமிகள் நமது உடம்பினுட் செல்லும். அதனால் நமக்கு நோய் உண்டாகும்.

16. கிருமிகள் பூச்சி புழுக்களை விட மிகமிக ________________________ .
   (a) பெரியவை
   (b) சிறியவை
   (c) வடிவானவை
   (d) பறப்பவை

17. உணவு என்பதன் ஒத்தகருத்துச் சொல் ___________________________ .
   (a) சாப்பாடு
   (b) உளண்
   (c) தண்ணீர்
   (d) மலம்

18. உடம்பு என்பதன் கருத்து என்ன?
   (a) உயிர்
   (b) உருவம்
   (c) தேகம்
   (d) தலை

19. நோய் என்பதன் ஒத்த கருத்து சொல்.
   (a) துன்பம்
   (b) வியாதி
   (c) சந்தோசம்
   (d) கவலை

20. செல்லும் என்பதன் ஒத்த கருத்து சொல்.
   (a) போகும்
   (b) ஊடுருவும்
   (c) ஆடும்
   (d) துள்ளும்

**21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு சரியான வாக்கியத்தை தெரிவு செய்க.**

## For questions 21 to 25 choose the right sentence arranged in the best way.

21.
   (a) கிழக்கு சூரியன் ஒளிக்கதிர்கள் வானில் தாவின.
   (b) கிழக்கு வானில் சூரியனின் ஒளிக்கதிர்கள் தாவின.
   (c) வானில் கிழக்கு சூரியனின் தாவின ஒளிக்கதிர்கள்.
   (d) ஒளிக்கதிர்கள் தாவின கிழக்கு சூரியனின் வானில்.

22.
   (a) பற்றி பாரதியார் பேசினேன் நான்.
   (b) பேசினேன் நான் பாரதியார் பற்றி.
   (c) நான் பாரதியார் பற்றிப் பேசினேன்.
   (d) பாரதியார் நான் பற்றி பேசினேன்.

23.
   (a) வாணிக்கு பரதத்தில் மிகுந்த அபிமானம் உண்டு.
   (b) மிகுந்த பரதத்தில் வாணிக்கு அபிமானம் உண்டு.
   (c) பரதத்தில் மிகுந்த வாணிக்கு அபிமானம் உண்டு.
   (d) அபிமானம் உண்டு வாணிக்கு பரதத்தில் மிகுந்த.

24.
   (a) பதில் கேள்விக்கு அளித்தான் அண்ணா நல்ல.
   (b) கேள்விக்கு பதில் நல்ல அளித்தான் அண்ணா.
   (c) பதில் அளித்தான் கேள்விக்கு நல்ல அண்ணா.
   (d) அண்ணா கேள்விக்குப் நல்ல பதில் அளித்தான்.

25.
   (a) நான் 10ஆம் வகுப்பிலும் தமிழை ஒரு பாடமாகக் கற்க விரும்புகிறேன்.
   (b) நான் வகுப்பிலும் தமிழை 10ஆம் பாடமாகக் கற்க ஒரு விரும்புகிறேன்.
   (c) தமிழை கற்க 10ஆம் வகுப்பிலும் ஒரு பாடமாகக் நான் விரும்புகிறேன்.
   (d) 10ஆம் வகுப்பிலும் ஒரு நான் தமிழைப் பாடமாகக் விரும்புகிறேன் நான்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**26 முதல் 29 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.**

**Combine the given words for the questions 26 to 29.**

26. மனம் + கவலை என்பதை சேர்த்து எழுதினால்

(a) மனக்கவலை

(b) மனம்கவலை

(c) மனங்கவலை

(d) மணக்கவலை

27. முகில் + கூட்டம் என்பதைச் சேர்த்து எழுதினால்

(a) முகில்கூட்டம்

(b) முகிற்கூட்டம்

(c) முகில்க்கூட்டம்

(d) முகில்ற்கூட்டம்

28. புன்னகை + செய்தாள் என்பதைச் சேர்த்து எழுதினால்

(a) புன்னகைச்செய்தாள்

(b) புன்னகைக்செய்தாள்

(c) புன்னகை செய்தாள்

(d) புன்னகைத்தாள்

29. வாழை + பழம் என்பதைச் சேர்த்து எழுதினால்

(a) வாழைப்பழம்

(b) வாழைபழம்

(c) வாழைச்பழம்

(d) வாழைற்பழம்

**30 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**For questions 30 to 32, select the most appropriate answer.**

30. உங்கள் அம்மாவின் தம்பி உங்களுக்கு என்ன உறவாக இருப்பார்?
    (a) பெரியப்பா
    (b) சித்தப்பா
    (c) மாமா
    (d) தாத்தா

31. மாலாவின் அப்பா கண்ணனுக்கு சித்தப்பா என்றால் கண்ணனின் அப்பா மாலாவின் அப்பாவிற்கு என்ன உறவு?
    (a) அண்ணா
    (b) தம்பி
    (c) பெரியப்பா
    (d) பெரியமாமா

32. நடிகன் என்பதன் எதிர்ப்பாற் சொல் எது?
    (a) நாடகன்
    (b) நடிகை
    (c) நாட்டியன்
    (d) நாட்டியை

**33 முதல் 36 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்தில் மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**For questions 33 to 36 select the most appropriate answer.**

33. சிறுவர்கள் மைதானத்தில் ______________________________ .
    (a) விளையாடினான்
    (b) விளையாடினார்கள்
    (c) விளையாடுவான்
    (d) விளையாடுகின்றன

34. நான் வளர்க்கும் பூனைக்குட்டி மதில் மேல் ____________________ .
    (a) பாய்ந்தன
    (b) பாய்ந்தார்
    (c) பாய்ந்தது
    (d) பாய்ந்தாள்

35. நானும் வாணியும் எதிர்வரும் விடுமுறையின்போது மிருகக்காட்சிச் சாலைக்கு செல்வதாக ________________________________.

(a) எண்ணியிருந்தேன்
(b) எண்ணியுள்ளோம்
(c) எண்ணியிருந்தாள்
(d) எண்ணியிருந்தார்கள்

36. வானவில்லில் காணப்படும் நிறங்களின் எண்ணிக்கை _____________________ .

(a) 5
(b) 6
(c) 7
(d) 8

**37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 37 to 40, select the correct word.**

| | |
|---|---|
| (a) மார்கழி | (b) தமிழ் |
| (c) பால் | (d) தைப்பொங்கல் |

37. அழுத பிள்ளை ________________________________ குடிக்கும்.

38. தமிழர்கள் பேசும் மொழி ________________________________ ஆகும்.

39. நத்தார் தினம் ________________________________ மாதத்தில் கொண்டாடப் படுகின்றது.

40. இந்துக்களால் தை மாதத்தில் கொண்டாடப்படும் விழா _____________________ எனப்படும்.

**41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களுக்கு சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 41 to 44, select the correct word.**

41. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் நூல்களை எழுதியவர் யார்?

(a) கண்ணதாசன்
(b) பாரதியார்
(c) வால்மீகி
(d) ஔவையார்

42. திருவள்ளுவர் எழுதிய நூலின் பெயர் இவற்றில் எது?

(a) குயில்பாட்டு
(b) அக நானூறு
(c) திருக்குறள்
(d) நாலடியார்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

43. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

(a) இளங்கோவடிகள்
(b) திருவள்ளுவர்
(c) கண்ணதாசன
(d) மகாத்மா காந்தி

44. கீழே தரப்பட்டவற்றில் பாரதியாரால் எழுதப்பட்டது?

(a) ராமாயணம்
(b) மகாபாரதம்
(c) பாப்பாப்பாட்டு
(d) கொன்றைவேந்தன்

**45 தொடக்கம் 46 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

**For questions 45 to 46, select the correct answer.**

45. கண்ணன் புது வீடு கட்டினான். கண்ணனின் வீட்டை கட்டிக் கொடுத்தவர்?

(a) மேசன்
(b) தச்சன்
(c) கணக்காளர்
(d) ஆசிரியர்

46. நோயாளிக்கு மருந்து தருபவர்?

(a) வைத்தியர்
(b) காசாளர்
(c) வர்ணனையாளர
(d) ஆசிரியர்

**வினாக்கள் 47-50 : பின்வரும் பந்தியில் விடுபட்ட சொற்களை விடைத்தாளில் தரப்பட்ட இடத்தில் எழுதுக.**

**Questions 47-50 : Read the paragraph and identify the missing words and write them against the question numbers in the answer sheet.**

அடுத்த வாரம் நானும் எனது (47)__________________________ கன்பராவுக்குச் சுற்றுலா (48)___________________________________ திட்டமிட்டுள்ளோம். அங்கு பாராளுமன்றம், அருங்காட்சியகம், பூங்கா (49)______________________________ பார்வையிடுவோம். கன்பராவிற்கு பேருந்தில் செல்வதா அல்லது மோட்டார் வண்டியில் செல்வதா என (50)________________________ தீர்மானிக்கவில்லை.